கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
අධ්‍යාපන, සංස්කෘතික, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය
Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs
வடக்கு மாகாண சபை, උතුරු පළාත් සභාව, Northern Provincial Council
செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
චෙම්මනි පාර, නල්ලූර්, යාපනය
Chemmany Road, Nallur, Jaffna
Website: www.np.gov.lk e-mail: npplane@yahoo.com, npmoeplan@gmail.com

எனது இல. / මගේ අංකය / My No. சுற்றுநிருப இல: 2015/04 | உமது இல / ඔබේ අංකය / Your No. | திகதி / දිනය / Date 19-05-2015

சகல பாடசாலை அதிபர்களுக்கும்,

## வட மாகாண பாடசாலைகளில் நிர்வாக, ஒழுக்க விதிகளை நடைமுறைப்படுத்தல்

இச் சுற்றறிக்கையானது, வட மாகாண பாடசாலை மாணவர்களின் நிர்வாகம் மற்றும் ஒழுக்கம் சார்ந்த கட்டுப்பாடுகள், விதிமுறைகளை 11.05.2015 இலிருந்து வட மாகாண பாடசாலைகளில் உடனடியாக நடைமுறைப்படுத்தும் வகையில் வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் வெளியிடப்படுகின்றது. ஆகவே, கீழே தரப்பட்ட அறிவுறுத்தல்களை மிக இறுக்கமாக நடைமுறைப்படுத்துவதற்கு ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

1. க.பொ.த.(சா/த), க.பொ.த.(உ/த) மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளுக்குரிய கௌரவிப்பு நிகழ்வுகளை பாரிய ஆடம்பர நிகழ்வுகளாக மேற்கொள்ளாது, உள்ளகரீதியாக சாதாரண நிகழ்வுகளாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

2. பாடசாலை மாணவர்கள் வீதிகளில் நிற்றல், நடமாடுதலை நிறுத்துவதற்கு பாடசாலைச் சமூகத்துடன் இணைந்து நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளல் வேண்டும். மேலும் மாணவர் வரவினை உறுதிப்படுத்துவதுடன், வராத மாணவர்கள் பற்றி அவர்களது பெற்றோருக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தல் வேண்டும்.

3. க.பொ.த.(சா/த), க.பொ.த.(உ/த) மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்களில் கல்வி கற்கும் சகல மாணவர்களையும் அந்தந்தப் பரீட்சைகளுக்கு தோற்ற அனுமதித்தல் வேண்டும்.

4. நிரல் கல்வி அமைச்சின் ED/03/w;s.f,a./ie,iquS/163 இலக்க, 02.12.2014ஆந் திகதிய கடிதத்தின் படி தொண்டர் ஆசிரியர் மற்றும் கல்வி சாரா ஊழியர்களை பாடசாலைகளில் இணைத்து வைத்திருத்தல் கூடாது. எனினும், மிக அவசிய தேவையேற்படுமிடத்து வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரது சிபார்சுடன் வட மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளரது அனுமதி பெறப்படல் வேண்டும். இந்நடைமுறையினை மீறும் வேளையில், பாடசாலை அதிபர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அவரது சம்பள உயர்வு போன்ற பிற நலன்கள் யாவும் உடனடியாக நிறுத்தப்படும்.

5. அதிபர், ஆசிரியருக்கான மணிவிழாக் கொண்டாட்டங்களை பாடசாலைகளில் கொண்டாடுதல் தடைசெய்யப் படுகின்றது. எனினும் சேவை நயப்பு விழா, பிரிவுபசார விழா போன்ற விழாக்களை பாடசாலைகளில் சிறிய அளவில் மேற்கொள்ள முடியும்.
மேலும் ஆசிரியர், மாணவர்களிடமிருந்து பணம் வசூலிப்பது போன்ற செயற்பாடுகள் தொடர்பில் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் மிகுந்த விசனம் ஏற்பட்டுள்ளமை கவனத்தில் கொள்ளப்பட்டு, பெறுமதிமிக்க அன்பளிப்புக்களை வழங்குவது, மற்றும் அதற்காக ஆசிரியர், மாணவர்களிடமிருந்து பணம் அறவிடுவது போன்ற செயற்பாடுகளுக்கும் இச்சுற்றறிக்கை மூலம் தடை விதிக்கப்படுகின்றது.

6. நூற்றாண்டு விழா, பொன்விழா போன்றவற்றையும் மலர் வெளியீடுகளையும் மேற்கொள்வதற்கு முன்னர் உரிய செலவு மதிப்பீட்டுடன் வலயக் கல்விப்பணிப்பாளரின் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

7. 07/2013 இலக்க பாடசாலை மேம்பாட்டுத்திட்ட செயற்பாடுகளை, பாடசாலை அபிவிருத்திக்குழு, பாடசாலை முகாமைத்துவக்குழு என்பவற்றின் உரிய பங்களிப்புடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

8. ஆசிரியர்களுக்குரிய நேர அட்டவணை மற்றும் பாட ஒதுக்கீடு என்பன வழங்கப்படல் வேண்டும். ஆசிரியர்களின் மிகை, பற்றாக்குறை ஆகியவற்றை வலயக் கல்விப்பணிப்பாளருக்குத் தெரியப்படுத்தல் வேண்டும்.

இ. இரவீந்திரன்
செயலாளர்
கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வட மாகாணம்

இ.இரவீந்திரன்,
செயலாளர்.

1. மாகாண கல்விப்பணிப்பாளர், வடக்கு மாகாணம்.
2. சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள். - அதிபர்களுக்கு தெரியப்படுத்துவதற்கும், கண்காணிப்பதற்கும்.

செயலாளர் / ලේකම් / Secretary 021-2219259
அலுவலகம் / කාර්යාලය / Office 021-3202704 (Admn.) 021-3202568 (Dev.) 021-3202281 (Plan.) 021-3202309 (Acct.) 021-7390665 (DSW)
தொலைநகல் / ෆැක්ස් / Fax 021-2220794